## கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் - 2015

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவு மற்றும் 18 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் விதிக்கப்பட்ட 2008 இன் 02 ஆம் இலக்க கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவக சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

நிறுவகத்தின் சகல சொத்துக்களும் பொறுப்புக்களும் நியாயமான பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், இருபத்தொராம் நூற்றாண்டிற்காக உயர் கல்வி (HETC) செயற்திட்டத்தின் கீழ் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது கிடைக்கப் பெற்று நிறுவகத்தினால் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் ரூபா 6,102,110 பெறுமதியான 26 நடைமுறையல்லாத சொத்து உருப்படிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த உருப்படிகள் நிலையான சொத்துப் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 693,065 கிரயத்திலான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிறுவகத்திற்கு மின்சாரம் பெற்றுக்கொள்ளும் போது மின் டிரான்ஸ்போமரொன்று பொருத்துவதற்காக இலங்கை மின்னசார சபைக்கு 2014 ஆகஸ்ட் 19 ஆந் திகதி ரூபா 2,598,600 செலுத்தப்பட்டிருந்ததுடன், டிரான்ஸ்போமரிலிருந்து விடுதிக்கும் நிர்வாகக்

கட்டிடத்திற்கும் மின்சாரத்தை வழங்குவதற்காக 2015 பெப்ரவரி 05 ஆந் திகதி ரூபா 2,594,145 செலவிடப்பட்டிருந்தது. ஒரே செயற்பாட்டிற்காக செலுத்தப்பட்ட இச்செலவினங்களின் 2 வகுதிகளில் மின்சார சபைக்கு செலுத்திய பணம் பிற்போடப்பட்ட வருமானச் செலவினமாக இனங்காணப்பட்டு 10 ஆண்டுகளில் இலாபத்திற்கு எதிராக பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கோபுரச் செலவினம் நடைமுறையல்லாத சொத்தொன்றாக இனங்காணப்பட்டு 20 சதவீதம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒரே செயற்பாட்டிற்காக ஏற்பட்ட செலவினம் 2 கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 240,520 தொகையான கணனி மற்றும் உபபாகங்கள் தொடர்பாக பின்பற்றப்பட்ட பெறுமானத்தேய்வுக் கொள்கையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அப்பெறுமானம் பூச்சியமாக இருக்க வேண்டிய போதிலும், கணக்கீட்டு பிழை காரணமாக தேறிய பெறுமதி ரூபா 21,579 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) கமத்தொழில் தொழில்நுட்ப பட்டப்படிப்பு பாடநெறியின் 17 ஆம் மற்றும் 16 ஆம் கட்டங்களில் பாடநெறியை பின்பற்றும் 25 மாணவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 187,500 கூட்டுத்தொகையான பாடநெறிக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிறுவகத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் இருப்புப் பதிவேடுகளின் பிரகாரம் எஞ்சிய வாழைக் கன்றுகளின் எண்ணிக்கை 39650 ஆக இருந்த போதிலும், பௌதீக பரிசோதனையின் பிரகாரம் அவ் எண்ணிக்கை 38650 ஆக இருந்தமையால் ரூபா 60,760 பெறுமதியான 1000 வாழைக் கன்றுகளுக்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மீதிகள்

கிராமிய முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மூன்று விவசாயிகளுக்கு 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் ரூபா 83,800 ஆன நிலுவைக் கடன் தவணையை அறவிடுவதற்கு நிறுவகம் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 138 மற்றும் 139 | உறுதிச்சீட்டொன்று சான்றுறுதிப்படுத்தும் போதும் கொடுப்பனவு செய்யும் போதும் உரிய உறுதிச்சீட்டுக்கள் அனைத்து வகையிலும் முழுமையாக இருத்தல் மற்றும் முறையான |

| | | |
|---|---|---|
| | | பற்றுச்சீட்டுக்கள் மூலம் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், செய்தித்தாள் அறிவித்தலொன்று வெளியிடுவதற்குரிய மற்றும் சர்வதேச செயலமர்வொன்றுக்குரிய பற்றுச்சீட்டுக்கள் இல்லாமல் ரூபா 207,654 ஆன முற்பணங்களை தீர்வு செய்வதற்கான உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தன. |
| | நிதிப்பிரமாணம் 371 | (i) முற்பணம் வழங்கல் எப்போதும் பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட வேண்டிய போதிலும், பதவிநிலைத் தரமல்லாத 14 உத்தியோகத்தர்களுக்கு 69 சந்தர்ப்பங்களில் ரூபா 2,487,240 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>(ii) உரிய செயற்பாடு நிறைவுபெற்றவுடனேயே முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 44 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,853,487 கூட்டுத்தொகையான முற்பணங்களை தீர்ப்பதற்காக 47 நாட்கள் முதல் 237 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஒரு தடவையில் வழங்கக்கூடிய ஆகக்கூடிய முற்பணம் ரூபா 100,000 ஆக இருந்த போதிலும், சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 110,000 முதல் ரூபா 170,637 வரையான வீச்சில் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தது. |

### 2.5 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பாடநெறியின் 16 ஆவது கட்டத்தில் விவசாயிகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2015 ஏப்ரல் முதல் செப்தெம்பருக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெளிநபரொருவரின் 2 ½ ஏக்கர் அளவிலான வயலொன்று பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் வயலைப் பெற்றுக்கொள்வதற்கும் செலவினத்தை மேற்கொள்வதற்கும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 5,991,049 மிகையொன்றானதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,789,001 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,780,050 ஆன அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்தது. அரசின் மானியம் ரூபா 12,000,000 ஆல் அதிகரித்திருந்தமை நிதி விளைவுகளின் மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதி விளைவுகளில் அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் பற்றாக்குறையொன்றும் 2015 ஆண்டில் மிகையொன்றும் இடம்பெற்றிருந்தது.

எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது நிறுவகத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை படிப்படியாக அதிகரித்திருந்த போதிலும், முறையே ரூபா 14,477,841, ரூபா 10,995,932 மற்றும் ரூபா 34,603,218 ஆக இருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது பங்களிப்பு வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் 2015 ஆம் ஆண்டின் போது அது 215 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 34,603,218 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் நடைமுறை விகிதம் 90:1 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது அது ரூபா 61.3:1 ஆக இருந்தது. இவ்வாறு நடைமுறை விகிதம் உயர் பெறுமதியொன்றை காண்பித்த போதிலும், சொத்துக்களில் 92 சதவீதம் வங்கி மீதிகளையே பிரதிநிதித்துவப்படுத்தியது. அதன் பிரகாரம் நிறுவகத்தின் அதிளவிலான சொத்துக்கள் அளவொன்று திரவச் சொத்துக்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2008 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவக சட்டவாக்கத்தின் பிரகாரம் கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான அடிப்படைகள் தொடர்பாக தற்போது உயர் கல்வியில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்காக உயர் கல்வியை வழங்குதல், மேம்படுத்துதல் என்பன பிரதான நோக்கங்களாகும்.
மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பட்டப்படிப்பு பாடநெறி, டிப்ளோமா கட்டம், உயர் டிப்ளோமா மட்டம் மற்றும் பட்டப்படிப்பு மட்டம் என மூன்று மட்டங்களைக் கொண்டிருந்ததுடன் பாடநெறிகளுக்காக பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 44 சதவீதத்திலிருந்து 75 சதவீதம் வரையான சதவீதமொன்று டிப்ளோமா மட்டத்தை பூர்த்தி செய்யாமல் பாடநெறிகளை விட்டு சென்றிருந்தனர். மேலும் பட்டப்படிப்பு படிப்பு இறுதி செயற்திட்டம் வரை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஆரம்பத்தில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 17 சதவீதம் முதல் 23 சதவீதத்திற்கு இடைப்பட்ட சிறு தரப்பினராக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிறுவனத்தினால் பராமரித்துச் செல்லப்படும் விவசாய தொழில்நுட்ப பட்டப்படிப்பு பாடநெறியின் கற்கை கால எல்லை 4 ஆண்டுகளும் 6 மாதங்களாக இருந்த போதும் 2009 ஆம் ஆண்டில் பட்டப்படிப்பு பாடநெறிக்கான முதலாவது மாணவர் குழு ஆட்சேர்க்கப்பட்டு 7 ½ வருடங்கள் கடந்திருந்த போதிலும் பாடநெறியின் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பட்டப்படிப்பு பாடநெறியின் அத்தியாவசிய பிரிவொன்றான செய்முறை விவசாய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (Farm Practice) இற்காக நிறுவனத்திற்கு வயலொன்று தேவையாக இருந்த போதிலும், வயலொன்றை நிரந்தரமாக நிறுவகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் விவசாய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பயிர் போகமொன்றுக்கு ரூபா 6,000 தொகை செலுத்தி 1 இற்கும் 2 இடைப்பட்ட பேர்ச்களுக்கு மிகச் சிறிய வயலொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) கணக்காய்வு திகதி வரை 41,000 இழைய வாழைக் கன்றுகளுக்கு மேற்பட்ட அளவிற்காக பூர்த்தி செய்ய முடியாத கட்டளைகள் காணப்படும் போது

நிறுவனத்திற்கு நன்மதிப்பை கொண்டு வருகையில் வாழைக்கன்றுகள் உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்கும் வாழைக் கன்றொன்றின் உற்பத்தி கிரயத்தை குறைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 தொழிற்பாட்டு செயற்பாடுகள்**

பல வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டு காலாவதியாகவிருந்த ரூபா 109,662 பெறுமதியான இரசாயனப் பொருட்கள் இருப்பு, முறையான புலனாய்வொன்று மேற்கொள்ளப்படாமல் 2015 ஆம் ஆண்டில் அழிக்கப்பட்டிருந்தன.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்**

தொழில்நுட்ப விடய பரப்பின் கீழ் பட்டப்படிப்பு பாடநெறி ஆரம்பிக்கப்படாதிருக்கையில் 2014 ஒக்தோபர் 18 ஆந் திகதியிலிருந்து பணிப்பொறுப்பு அடிப்படையில் செயற்திட்ட முகாமையாளரொருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 225,000 தொகையும் ரூபா 320,000 தொகையுமாக படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

**4.4 வெளிப்படையான மோசடிகள்**

விவசாய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பயிரிடப்பட்ட 2½ ஏக்கர் நெற் பயிர்செய்கையிலிருந்து எவ்வித அறுவடையொன்றோ அறுவடைக்குரிய வருமானமொன்றோ நிறுவகத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

**4.5 நிதியங்களின் குறைப் பயன்பாடு**

கணக்காண்டு ஆரம்பத்தின் போது செலவிடப்பட்ட மூலதன மானியக் கணக்கில் ரூபா 45,318,622 ஆன மீதியொன்று காணப்படும் போது ஆண்டின் மூலதன செலவினம் சரியாக எதிர்வுகூறப்படாமல் திறைசேரியிடமிருந்து ரூபா 65,000,000 மூலதன மானியம் பெற்றுக்கொண்டு ஆண்டினுள் ரூபா 14,437,654 மாத்திரம் செலவிடப்பட்டதன் காரணமாக ரூபா 95,880,968 தொகை வங்கி நடைமுறைக் கணக்கில் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**4.6 விளைவற்ற மற்றும் குறைபயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உயர் கல்வி அமைச்சின் நிதி ஏற்பாடு அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட 60 தங்குமிட விடுதிகள் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 220,096,952 செலவிடப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது 100 அறைகளுடன் கூடிய தங்குமிட விடுதியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், 2014-2016 காலப்பகுதியில் பரீட்சை நடாத்தப்படும் திகதிகளில் மாத்திரம் இந்த விடுதியில் 4 இற்கும் 8 இற்கும் இடைப்பட்ட அறைகள் மாத்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவகத்தின் தேவைப்பாடு மற்றும் தேவைப்படும் காலம் தொடர்பாக உரிய எதிர்வுகூறலொன்று இல்லாமல் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 84,214 பெறுமதியான நிழற்பட பிரதி இயந்திரங்களுக்காக பயன்படுத்தப்படும் 11 டோனர்கள் 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் காணப்பட்டன.

**4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பாடநெறியின் முதலாவது கட்டத்தின் கீழ் டிப்ளோமா மட்டம் சித்தியடைந்த இரண்டாவது மற்றும் மூன்றாவது மாணவக் குழுக்களில் 53 மாணவர்களுக்கு சான்றிதழ்களை

வழங்குவதற்காக நிறுவகத்தின் கேட்போர் கூடத்தை பயன்படுத்த முடியுமாக இருக்கையில் அம்பாந்தோட்டை சர்வதேச மாநாட்டு மண்டபத்தைப் பயன்படுத்தியமைக்காக ரூபா 350,000 பணம் செலவிடப்பட்டிருந்தது.

### 4.8 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்ட 12 பதவிகளில் 8 பதவிகள் கணக்காண்டு இறுதி திகதி வரையில் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் உயர் கல்வி அமைச்சின் அங்கீகாரம் இல்லாமல் பணிப்பொறுப்பு அடிப்படையில் 28 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டினுள் விவசாய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறிக்காக 175 மாணவர்களைச் சேர்ப்பதற்கும் நல்ல நிலைமையிலான 240,000 மரபணு மாற்றப்பட்ட வாழைக் கன்றுகள் உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 118 ஆகவும் உற்பத்தி செய்யப்பட்ட வாழைக் கன்றுகளின் எண்ணிக்கை 185,038 ஆகவும் இருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) செயற்பாட்டு நிர்வாகம் | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மாணவர்களை பாடநெறி முடிவடையும் வரையில் தக்கவைத்துக்கொள்வதற்கு பொருத்தமான தந்திரோபாயங்களை அறிமுகப்படுத்தாமை. |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை |
| (இ) இருப்புக் கட்டுப்பாடு | தேவைப்பாட்டை இனங்கண்டு கொள்வனவு செய்யாமை. |
| (ஈ) நிதிக் கட்டுப்பாடு | சுற்றறிக்கைளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாமை |